يُّدْخِلُ مَنْ يَّشَآءُ فِىْ رَحْمَتِهٖ ؕ وَالظّٰلِمِيْنَ اَعَدَّ لَهُمْ
عَذَابًا اَلِيْمًا ۳۱ ۲ ع ۹ ۲۰

سُوْرَةُ الْمُرْسَلٰتِ مَكِّيَّةٌ وَّهِىَ خَمْسُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

وَالْمُرْسَلٰتِ عُرْفًا ۙ۱ فَالْعٰصِفٰتِ عَصْفًا ۙ۲ وَّالنّٰشِرٰتِ
نَشْرًا ۙ۳ فَالْفٰرِقٰتِ فَرْقًا ۙ۴ فَالْمُلْقِيٰتِ ذِكْرًا ۙ۵ عُذْرًا اَوْ
نُذْرًا ۙ۶ اِنَّمَا تُوْعَدُوْنَ لَوَاقِعٌ ؕ۷ فَاِذَا النُّجُوْمُ طُمِسَتْ ۙ۸ وَ
اِذَا السَّمَآءُ فُرِجَتْ ۙ۹ وَاِذَا الْجِبَالُ نُسِفَتْ ۙ۱۰ وَاِذَا الرُّسُلُ
اُقِّتَتْ ؕ۱۱ لِاَىِّ يَوْمٍ اُجِّلَتْ ؕ۱۲ لِيَوْمِ الْفَصْلِ ۚ۱۳ وَمَآ اَدْرٰىكَ
مَا يَوْمُ الْفَصْلِ ؕ۱۴ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ۱۵ اَلَمْ
نُهْلِكِ الْاَوَّلِيْنَ ؕ۱۶ ثُمَّ نُتْبِعُهُمُ الْاٰخِرِيْنَ ۱۷ كَذٰلِكَ
نَفْعَلُ بِالْمُجْرِمِيْنَ ۱۸ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ۱۹ اَلَمْ
نَخْلُقْكُّمْ مِّنْ مَّآءٍ مَّهِيْنٍ ۙ۲۰ فَجَعَلْنٰهُ فِىْ قَرَارٍ مَّكِيْنٍ ۙ۲۱
اِلٰى قَدَرٍ مَّعْلُوْمٍ ۙ۲۲ فَقَدَرْنَا ۖ فَنِعْمَ الْقٰدِرُوْنَ ۲۳ وَيْلٌ
يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ۲۴ اَلَمْ نَجْعَلِ الْاَرْضَ كِفَاتًا ۙ۲۵

31. (ஆகவே, உங்களில்) அவன் நாடியவரை தன் அருளில் நுழைவிக்கிறான்; இன்னும், அநியாயக்காரர்கள்_அவர்களுக்காகத் துன்புறுத்தும் வேதனையை அவன் தயார்படுத்தி வைத்திருக்கிறான்.

---

அத்தியாயம் : 77

## அல்முர்ஸலாத் _ அனுப்பப்படுபவை

வசனங்கள் : 50 மக்கீ ருகூஃகள் : 2

---

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்**
**அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. தொடர்ச்சியாக (ஒன்றன் பின் ஒன்றாக) அனுப்பப்படுபவைகளின் மீது சத்தியமாக_
2. வீசும் கடும் புயல் காற்றுகளின் மீது சத்தியமாக!
3. (மேகங்களைக்) கிளப்பி பரப்பிவிடுபவைகளின் மீது சத்தியமாக!
4. (சத்தியத்தையும் அசத்தியத்தையும்) வேறு படுத்திக் காட்டு(ம் வஹீ எனும் கட்டளையைக் கொண்டு இறங்கு)பவர்கள் மீது சத்தியமாக!
5. (தூதர்கள்பால்) வஹீயைக்கொண்டு வந்து கொடுப்பவர்கள் மீது சத்தியமாக!
6. (அந்த வஹீயின் மூலம் அறிவிக்கப்பட்டவை) மன்னிப்பாக, அல்லது எச்சரிக்கையாக இருக்கும்.
7. நிச்சயமாக நீங்கள் வாக்களிக்கப்படுவதெல்லாம் நிகழக்கூடியதேயாகும்.
8. ஆகவே, நட்சத்திரங்கள் _(அவற்றின் ஒளி) அழிக்கப்பட்டு விடும்போது_
9. மேலும், வானம் _ அது பிளக்கப்பட்டு விடும்போது_
10. இன்னும், மலைகள் (தூசிகளைப்போன்று) பறக்கடிக்கப்பட்டு விடும்போது_
11. மேலும், தூதர்களுக்கு நேரம் குறிக்கப்பட்டு விடும்போது_
12. எந்த நாளுக்காக (இவை யாவும்) பிற்படுத்தப்பட்டிருக்கின்றன?
13. தீர்ப்பு நாளுக்காக (பிற்படுத்தப்பட்டன என்று கூறப்படும்).
14. மேலும் (நபியே!), தீர்ப்பு (க்கூறப்படும்) நாள் என்னவென்று உமக்கு அறிவித்தது எது?
15 (நம்முடைய வசனங்களைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
16. (அதனைப் பொய்யாக்கிக் கொண்டிருந்த) முன்னிருந்தோரை நாம் அழிக்கவில்லையா?
17. பின்னர், பின்னுள்ளோரை (அழிக்கப்பட்ட) அவர்களைப் பின் தொடருமாறு நாம் செய்தோம்.
18. குற்றவாளிகளை அவ்வாறுதான் நாம் (அழித்து நாசம்) செய்வோம்.
19. (நம்முடைய வசனங்களைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.
20. இழிவான நீரிலிருந்து உங்களை நாம் படைக்கவில்லையா?
21. பின்னர், அதனைப் பாதுகாப்பான இடத்தில் (கர்ப்பப் பையில்) ஆக்கினோம்.
22. குறிப்பிட்ட (கால) அளவு வரை;
23. பின்னர், நாமே அதனை (சிசுவாக) ஏற்படுத்தினோம்; ஏற்படுத்துவோரில் (நாம்) நல்லோராவோம்.
24. (ஆகவே இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்!
25. அணைத்துக் கொள்ளக்கூடியதாக பூமியை நாம் ஆக்கவில்லையா?

اَحْيَآءً وَّاَمْوَاتًا ﴿٢٦﴾ وَّجَعَلْنَا فِيْهَا رَوَاسِيَ شٰمِخٰتٍ وَّ
اَسْقَيْنٰكُمْ مَّآءً فُرَاتًا ﴿٢٧﴾ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿٢٨﴾
اِنْطَلِقُوْٓا اِلٰى مَا كُنْتُمْ بِهٖ تُكَذِّبُوْنَ ﴿٢٩﴾ اِنْطَلِقُوْٓا اِلٰى ظِلٍّ
ذِيْ ثَلٰثِ شُعَبٍ ﴿٣٠﴾ لَّا ظَلِيْلٍ وَّلَا يُغْنِيْ مِنَ اللَّهَبِ ﴿٣١﴾
اِنَّهَا تَرْمِيْ بِشَرَرٍ كَالْقَصْرِ ﴿٣٢﴾ كَاَنَّهٗ جِمٰلَتٌ صُفْرٌ ﴿٣٣﴾ وَيْلٌ
يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿٣٤﴾ هٰذَا يَوْمُ لَا يَنْطِقُوْنَ ﴿٣٥﴾ وَلَا
يُؤْذَنُ لَهُمْ فَيَعْتَذِرُوْنَ ﴿٣٦﴾ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿٣٧﴾
هٰذَا يَوْمُ الْفَصْلِ جَمَعْنٰكُمْ وَالْاَوَّلِيْنَ ﴿٣٨﴾ فَاِنْ كَانَ لَكُمْ
كَيْدٌ فَكِيْدُوْنِ ﴿٣٩﴾ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿٤٠﴾ اِنَّ ع ١ / ٢١
الْمُتَّقِيْنَ فِيْ ظِلٰلٍ وَّعُيُوْنٍ ﴿٤١﴾ وَّفَوَاكِهَ مِمَّا يَشْتَهُوْنَ ﴿٤٢﴾
كُلُوْا وَاشْرَبُوْا هَنِيْٓئًۢا بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿٤٣﴾ اِنَّا كَذٰلِكَ
نَجْزِي الْمُحْسِنِيْنَ ﴿٤٤﴾ وَيْلٌ يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿٤٥﴾ كُلُوْا
وَتَمَتَّعُوْا قَلِيْلًا اِنَّكُمْ مُّجْرِمُوْنَ ﴿٤٦﴾ وَيْلٌ يَّوْمَئِذٍ
لِّلْمُكَذِّبِيْنَ ﴿٤٧﴾ وَاِذَا قِيْلَ لَهُمُ ارْكَعُوْا لَا يَرْكَعُوْنَ ﴿٤٨﴾ وَيْلٌ
يَّوْمَئِذٍ لِّلْمُكَذِّبِيْنَ ﴿٤٩﴾ فَبِاَيِّ حَدِيْثٍۭ بَعْدَهٗ يُؤْمِنُوْنَ ﴿٥٠﴾ ع ٢ / ٢٢

26. உயிரோடிருப்போரையும், மரணித்தோரையும் (அணைத்துக் கொள்ளக் கூடியதாக அதை நாம் ஆக்கினோம்.)

27. மேலும், அதில் உயர்ந்த மலைகளையும் நாம் அமைத்து, இனிமையான நீரையும் (அவற்றிலிருந்து) உங்களுக்குப் புகட்டுகின்றோம்.

28. (நம்முடைய இவ்வருட்கொடையைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்!

29. (மறுமையில் இவர்களிடம்,) எ(ந்த நரகத்)தை நீங்கள் பொய்ப்படுத்திக் கொண்டிருந்தீர்களோ, அதன்பாலே நீங்கள் நடந்துசெல்லுங்கள் (என்றும்),

30. மூன்று கிளைகளையுடைய (நரகப் புகையின்) நிழலின்பால் நீங்கள் நடந்துசெல்லுங்கள் (என்றும் அவர்களுக்குக் கூறப்படும்).

31. (அது குளிர்ச்சி தரும்) நிழல் தரக்கூடியதல்ல; தீச்சுவாலையிலிருந்து அது காக்கக் கூடியதுமல்ல.

32. (எனினும்) நிச்சயமாக அது (பெரிய) மாளிகையைப் போன்ற நெருப்புப் பொறிகளை அது வீசி எறியும்.

33. நிச்சயமாக அது மஞ்சள் நிறமான (பெரிய) ஒட்டகங்களைப் போல் இருக்கும்.

34. (இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

35. இது அவர்கள் பேசமுடியாத நாளாகும்.

36. அன்றியும், அவர்களுக்கு (எதுவும் கூற) அனுமதிக்கப்படமாட்டாது; (அவ்வாறிருந்தும் வேதனை தாங்காது) அவர்கள் புகல் கூறுவர்.

37. (இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

38. இது தீர்ப்பு நாள்; உங்களையும், (உங்களுக்கு) முன்னுள்ளோரையும் (அந்நாளைக்காக) நாம் ஒன்று சேர்த்து விட்டோம்.

39. ஆகவே, ("தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள) உங்களிடம் ஏதும் சூழ்ச்சி இருந்தால் என்னிடம் சூழ்ச்சி செய்து பாருங்கள்" (என்றும் கூறப்படும்.)

40. பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

41. நிச்சயமாக பயபக்தியுடையோர்கள், (அந்நாளில் சுவனபதியிலுள்ள மாளிகைகள், மரங்களின்) நிழல்களிலும், ஊற்றுகளி(ன் அருகி)லும் இருப்பார்கள் _

42. அவர்கள் விரும்பியவற்றிலுள்ள கனிகளி(லிருந்து புசித்து இன்புறுவதி)லும் இருப்பார்கள்.

43. ("உலகில் நற்செயல்களை) நீங்கள் செய்து கொண்டிருந்ததன் காரணமாக இன்பமாக உண்ணுங்கள்; இன்னும் பருகுங்கள்" (என்று அவர்களிடம் கூறப்படும்).

44. இவ்வாறே நன்மை செய்பவர்களுக்கு நிச்சயமாக நாம் கூலி வழங்குவோம்.

45. (இதனைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

46. (நம் அத்தாட்சிகளைப் பொய்யாக்குபவர்களே ! உலகில்) நீங்கள் புசியுங்கள், கொஞ்சம் சுகமும் அனுபவியுங்கள்; நிச்சயமாக நீங்கள் குற்றவாளிகளே _

47. (அல்லாஹ்வின் வசனங்களைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

48. மேலும், அவர்களிடம், " நீங்கள் குனிந்து (தொழுது) கொள்ளுங்கள்" என்று கூறப்பட்டால், அவர்கள் (தொழுது) குனிய மாட்டார்கள்.

49. (அவனது இக்கட்டளையைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்.

50. எனவே (குர்ஆனாகிய) இதற்குப் பின்னர், எவ்விஷயத்தைத்தான் அவர்கள் விசுவாசிப்பார்கள்?